இந்து தமிழ் திசை



இந்துக் கல்லூரியின் 26–வது பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவிகளுடன் சிறப்பு விருந்தினர், கல்லூரி நிர்வாகிகள்.

# இந்துக் கல்லூரியில் 26-வது பட்டமளிப்பு விழா

## 1,023 பேருக்கு பட்டங்களை மேகாலயா ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி வழங்கினார்

**சென்னை**

பட்டாபிராம் பகுதியில் உள்ள தருமமூர்த்தி இராவ்பகதூர் கலவல கண்ணன் செட்டி இந்துக் கல்லூரியின் 26-வது பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

கல்லூரிச்செயலர் எம்.வெங்கடேச பெருமாள் விழாவுக்கு தலைமை தாங்கினார். முதல்வர் க.கல்விக்கரசி சிறப்பு விருந்தினரை அறிமுகப்படுத்தி வரவேற்றுப் பேசினார். மேகாலயா உயர் நீதிமன்ற ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி எஸ்.வைத்தியநாதன் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கிப் பேசும்போது, “கல்வியை வாழ்நாள் முழுவதும் துணைநிற்கும் அரிய செல்வமாக மாணவர்கள் கருத வேண்டும். தலைமைத்துவப் பண்புகள், இந்தியப் பண்பாட்டு விழுமியங்கள், குடும்பத்தினருக்கும் மூத்தோருக்கும் செலுத்த வேண்டிய மரியாதை, நேர்மை, நாணயம், கருணை, பரிவு, விடாமுயற்சி போன்ற உயரிய மனிதநேயப் பண்புகள் அவசியம். நாட்டின் முன்னேற்றப் பணிகளில் பங்காற்றவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்கவும், பொறுப்புணர்வுமிக்க குடிமக்களாகச் செயல்படவும் வேண்டும்” என்று அறிவுறுத்தினார்.

விழாவில் 1,023 மாணவர்களுக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன. இதில் 34 மாணவர்கள் பல்கலைக்கழக அளவிலான தர வரிசையில் இடம் பெற்றுள்ளனர். இந்த சாதனைகளைப் பாராட்டும் வகையில், கல்லூரி நிர்வாகம் சார்பில் ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. நிறைவாக பட்டதாரிகள் பட்டமளிப்பு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

அறங்காவலர் உப்புத்துர் சக்தி ஆகாஷ் ராஜ், கல்லூரி இயக்குநர் என்.இராஜேந்திர நாயுடு ஆகியோர் விழாவில் கலந்துகொண்டனர்.

# హిందూ కళాశాలలో ఘనంగా 26వ స్నాతకోత్సవం



**విశ్వవిద్యాలయ స్థాయి ర్యాంకులు సాధించిన విద్యార్థులతో అతిథులు, నిర్వాహకులు**

**కొరుక్కుపేట:** చెన్నై శివారు ప్రాంతం పట్టాబిరామ్‌లోని (స్వయంప్రతిపత్తి కళాశాల) ధర్మమూర్తి రావు బహదూర్ కలవల కన్నన్ చెట్టి హిందూ కళాశాలలో 26వ స్నాతకోత్సవాన్ని ఘనంగా నిర్వహించారు. ఈ స్నాతకోత్సవ కార్యక్రమానికి ముఖ్య అతిథిగా మేఘాలయ ఉన్నత న్యాయస్థానం పూర్వ జస్టిస్ ఎస్. వైద్యనాథన్ హాజరయ్యారు. ఆయన ప్రసంగిస్తూ విద్యార్థులు విద్యను జీవితాంతం తమకు అత్యంత విలువైన ఆస్తిగా భావించాలని, ఎదురయ్యే అపజయాలను ధైర్యంగా అధిగమించి తమ విద్యాసంస్థకు గౌరవప్రదమైన ప్రతినిధులుగా నిలవాలని సూచించారు. కార్యక్రమంలో వివిధ యూజీ, పీజీ కోర్సులకు చెందిన మొత్తం 1,023 మంది విద్యార్థులకు డిగ్రీలు ప్రదానం చేశారు. ప్రథమ ర్యాంకు సాధించిన విద్యార్థికి అత్యధికంగా రూ.15,000 నగదు బహుమతి ప్రదానం చేయగా, ఇతర ర్యాంకు హోల్డర్లకు కూడా వారి విద్యా ప్రతిభను ప్రశంసిస్తూ నగదు పురస్కారాలు అందజేశారు. ఈ కార్యక్రమానికి కళాశాల కార్యదర్శి ఎం. వెంకటేశ్ పెరుమాళ్ అధ్యక్షత వహించగా, ప్రిన్సిపాల్ డా. జి. కల్విక్కరాసి, డైరెక్టర్ డా. ఎస్. రాజేంద్ర నాయుడు, ట్రస్టీ డాక్టర్ ఉప్పుటూరు శక్తి ఆకాశ్ రాజ్, అధ్యాపకులు, తల్లిదండ్రులు, పూర్వ విద్యార్థులు పాల్గొన్నారు. విద్యార్థులు స్నాతక ప్రతిజ్ఞ స్వీకరించడంతో ఈ వేడుక ముగిసింది.